16th November 1957]

Sri K. RAMACHANDRAN : வீடுகள் கட்டும் விஷயத்திலே ராமகிருஷ்ண மிஷன் செய்யும் உதவிக்கும், சர்க்கார் ரூ. 100 கொடுப்பதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா ? அல்லது இரண்டும் வேறு வேறாக கருதப்படுகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ராமகிருஷ்ண மிஷன் செய்யும் உதவியானது உடனடியாக " சைகிளோன் ரிலீப் " பண்டிலிருந்து செய்யக்கூடியது. அதனால் அதை சேர்த்துக்கொள்ளுவதா, இல்லையா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் அதை கணக்கு எடுத்துக்கொள்ளாமல் தனிப்பட்டு ரூ. 100 கொடுக்கவேண்டுமென்பதுதான் சர்க்காரின் உத்தேசம்.

Sri P. S. SANTHANAM : ராமநாதபுரம் ஜில்லாவில் முதுகுளத்தூர் பகுதியில் விவசாயிகளுடைய விவசாயக் கருவிகளெல்லாம் தீயில் எறியப்பட்டு, வெந்து வீணாகிவிட்டன. அவர்களுக்கு விவசாயக் கருவிகள் வாங்கிக் கொடுக்க சர்க்காருக்கு ஏதாவது யோசனை இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : வீடுகளை திருப்பி கட்டிக் கொள்ளுவதற்காக முன்பு ரூ. 30 தான் கொடுக்கப்பட்டது. அதைத் தவிர ராமகிருஷ்ண மிஷன் வேறு தனியாக உதவி செய்கிறார்கள். இதையெல்லாம் கணக்கிட்டு இப்பொழுது சர்க்கார் ரூ. 100 கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த மாதிரி எல்லா விதமான சில்லரைச் செலவுகளுக்காகத்தான் இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது.

Sri P. K. MOOKIAH THEVAR : அந்தக் கலகத்தில் பாதிக்கப் 9–20
பட்டவர்கள் விண்ணப்பித்துக்கொண்டால் சாதி வித்யாசம் இல்லாமல் உதவி a.m.
அளிப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அதேபோல் அரசாங்கத்தாரால் சுட்டுக்கொல்லப்பட்ட குடும்பத்தாருக்கும் உதவி அளிப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் என்று பொதுவாகக் குறிப்பிட்டேன். அவர்கள் எந்தவிதமான உயிர் இழந்திருந்தாலும் அவர்களுடைய குடும்ப நிலைமையைப் பரிசீலனை செய்து கவனிக்கப்படும்.

' Most Backward ' Classes.

* 217 *Q.*—Sri R. CHIDAMBARA BHARATHI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received a representation 9-20
from 10 M.L.As. requesting that the Kallar, the Maravar and the a.m.
Agamudaiyar communities should be included in the list of ' Most Backward Classes ' ; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under the consideration of the Government.

Sri R. CHIDAMBARA BHARATHI : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கேட்ட விஷயம் யோசனையில் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் பின்தங்கிய அந்த வகுப்பார் பின்தங்கிய வகுப்பு பட்டியலில் சேர்க்கப்படாமல் விடப்பட்டது தற்செயலாகவோ அன்றி வேறுவிதமாகவோ இருக்கலாம். இப்போது அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருப்பதனால் இந்த வருஷத்தில் இருந்தே இவர்களையும் அந்த லிஸ்டில் சேர்த்து சலுகைகள் கொடுப்பதற்கு நம் மாகாண சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

[16th November 1957

THE HON. SRI P. KAKKAN : நான் முன்பே சொன்னேன். " மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிடி " என்று முடிவு செய்தது மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பாக்வார்டு கமிஷன் என்று அவர்கள் கொடுத்த லிஸ்டை வைத்துக்கொண்டு தான் சர்க்கார் இந்த முடிவை செய்திருக்கிறது. இப்போது சிதம்பரபாரதி கேட்டிருப்பது போல கேள்வியில் கண்டுள்ள சமூகத்தார்களையும் பாக்வார்ட் கம்யூனிடி லிஸ்டில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதாக விண்ணப்பம் வந்திருக்கிறது. கள்ளர் ரிக்ளமேஷனுக்காக அதிகமாக இப்போது செலவு செய்து வருகிறோம். இவர்களுடைய கோரிக்கையின் படி இந்த வருஷமே இவர்களையும் இந்த லிஸ்டில் சேர்த்துக்கொள்ளலாயா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கல்வி டைரெக்டர் இதற்குச் சாதகமாக ரிப்போர்ட் தயாரித்திருக்கிறார்கள். ஹரிஜன வெல்பர் டைரெக்டரும் இதைப் பற்றி தமது முடிவு தெரிவித்தவுடன் அரசாங்கம் அவற்றைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

SRI N. MAHALINGAM : என்ன என்ன காரணங்களைக் கொண்டு மிகப் பின்தங்கிய வகுப்பினர் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : சமுதாயத்துறையில், கல்வித்துறையில் மிகவும் பின் தங்கியவர்கள் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

Amendment of the Madras Betting Tax Act.

* 218 *S.N.Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any difficulty in giving effect to the provisions of the Madras Betting Tax Act, 1935, as subsequently amended by Madras Acts XIV of 1936, XVII of 1943 and XX of 1947; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்தச் சட்டம் நிறைவேறி பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் இதை எந்தக் காரணத்திற்காக அமுலுக்குக் கொண்டுவரவில்லை என்று சொல்ல முடியுமா ? தவிர குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரையில் ஆயிரக்கணக்கான மக்கள் கடனை வாங்கிவிட்டு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : கமர்ஷியல் டாக்ஸில் பெட்டிங் டாக்ஸ் வருவதைப் பற்றிய மசோதா இது. குதிரைப் பந்தய ஒழிப்பு மசோதா இல்லை இது. இதை ஒழிப்பதிலும் எனக்கும் விருப்பம் இல்லை. சர்க்காருக்கு இதில் இருந்து பணம் வந்து கொண்டிருப்பதனால், குதிரைப் பந்தயத்தைப்பற்றிய உபகேள்வி இதில் எழாது. வேறு அமைச்சரிடம் அதைப்பற்றிக் கேட்கவேண்டும்.

Betting on races.

* 219 *S.N.Q.*—SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have refused to extend the period of licence granted to betting on races as the licence is to terminate this year; and

(*b*) whether the betting on races will be abolished forthwith as per the Legislation passed in the year 1948?